www.tamilarangam.net

# அரசுப் படைகளின் பலமுனைத் தாக்குதல் நீடிப்பு

# கொக்கட்டிச்சோலை மக்கட்கு உணவுப் பொருட்களை கொண்டு செல்ல அனுமதி மறுப்பு!

## பிரஜைகள் குழுவினர், மட்டக்களப்பு தொழிற்சங்க சம்மேளனம் செய்வதறியாது திகைப்பு

03.02.87.

உணவின்றி அவதிப்படும் கொக்கட்டிச்சோலை மக்களுக்கு உணவு, மற்றும் மருந்து வகைகளை எடுத்துச்செல்வதற்கு மட்டக்களப்பு பிரஜைகள் குழுவினரும், மட்டக்களப்பு மாவட்ட தொழிற்சங்க சம்மேளனமும் மட்டக்களப்பு பாதுகாப்பு அதிகாரியிடம் அனுமதிக்காக விண்ணப்பித்துள்ள போதிலும் இன்னமும் அதற்கான அனுமதி கிடைக்கவில்லை.

மட்டக்களப்பு செயலகத்தின் உதவியுடன் ஞாயிற்றுக்கிழமை இரு போதிகளில் அனுப்பப்பட்ட உணவுப் பொருட்களை அதிரடிப் படையினரே பொறுப்பேற்று விநியோகிக்க உள்ளதாகவும் தெரிய வருகிறது.

பெரும்பாலான பொது மக்கள் படையினரிடம் செல்ல பீதி கொண்டுள்ளார்கள் என்றும் இதனால் சரியான விநியோகம் இடம் பெறவில்லை எனவும் செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொக்கட்டிச்சோலைப் பகுதி இன்னும் வழமைக்குத் திரும்பவில்லை. காயமடைந்த நூற்றுக் கணக்கான மக்கள் சுதந்திர நடமாட்டம் இல்லாததால் மறைவிடங்களில் இருந்து வெளியில் வர அஞ்சுகின்றனர்.

காயமடைந்து காட்டுக்குள் புகலிடம் தேடிய இப் பகுதி வாசியான சுந்தரம்பிள்ளை (35 வயது) என்ற குடும்பஸ்தர் பாம்பு கடித்ததனால் நேற்று மரணமானார்.

கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு, அரசடித்தீவு போன்ற பகுதியில் முகாமிட்டுள்ள அதிரடியினர் இரவு பகலாக பலத்த தேடுதலையும் ரோந்து நடவடிக்கைகளையும் செய்து வருகின்றனர்.

பாதுகாப்புக்காய் இப்பகுதி ஆண்களெல்லாம் காடுகளில் மறைந்திருக்க வீடுகளில் தனித்திருக்கும் பெண்களின் நிலை குறித்து மக்கள் மனக் கலக்கமும் கொண்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச உதவித்தாபனங்களின் உதவி உடனடியாகத் தேவையென்று மட்டு. பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. சாம் தம்பிமுத்து இத்தகைய தாபனங்களுடன் தொடர்புகொண்டு கேட்டுக் கொண்டிருக்கிறார்.

மட்டக்களப்புப் பகுதியிலுள்ள பொதுத்தாபனங்கள் இப் பகுதி மக்களிடம் இருந்து நிவாரண உதவிகளைத் திரட்டி வருகின்றன.

நேற்று ஆறாவது நாளாக கொக்கட்டிச்சோலை மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்படவில்லை. இதனால் பொது மக்கள் பெரும் அவதிக்குள்ளானதாகத் தெரிய வருகிறது.

# இலங்கைக்கு நோர்வே உதவி குறைக்கப்பட்டது

## இனப்பிரச்சினை நீடிப்பது காரணம்

(நமது நிருபர்)

இனப் பிரச்சினை நீடித்து வருவது இவ்வாண்டு இலங்கைக்கான நோர்வேயின் உதவி குறைக்கப்பட்டதற்கான காரணங்களில் ஒன்று என நிதி அமைச்சு கூறியிருக்கிறது.

இலங்கையில் நோர்வே உதவியுடன் இடம்பெற்று வரும் அபிவிருத்தித் திட்டங்களை பல வாரங்களாகப் பார்வையிட்ட நோர்வே ஆய்வுக் குழு ஒன்று நிதி அமைச்சரைச் சந்தித்து இனப் பிரச்சினை நீடித்து வருவது குறித்து தங்கள் பெரும் கவலையைத் தெரிவித்துக் கொண்டது.

இலங்கையில் அமைதி ஏற்படுமானால் உதவியை மேலும் அதிகரிப்பதுபற்றி நோர்வே ஆராயும் என்றும் நிதி அமைச்சரிடம் அது தெரிவித்தது.

சென்ற ஆண்டு நோர்வே 850 லட்சம் குரோனர் உதவியை வழங்கியது ஆனால் இவ்வாண்டு 650 லட்சம் குரோனராக உதவியை அது குறைத்துவிட்டது.

இலங்கை இனப் பிரச்சினைபற்றி நோர்வே பாராளுமன்றில் தெரிவிக்கப்பட்ட பொதுக் கருத்தும், பத்திரிகைகளும், அரசு சார்பற்ற ஸ்தாபனங்களும், மந்திரி சபைகளும் தெரிவித்துள்ள கருத்துக்களுமே உதவி குறைக்கப்பட்டதற்கான காரணங்களில் சில எனக் கூறப்படுகிறது.

# 'கைதிகள் நிலையில் கொக்கட்டிச்சோலை பகுதி மக்கள்'

06.02.87.

மட்டக்களப்பு,

கடந்த ஒருவார காலத்துக்கும் மேலாக அதிரடிப் படையினரால் முற்றுகையிடப்பட்டிருக்கும் மக்களைச் சந்தித்து நிவாரண உதவிகளைச் செய்வதற்கும், அவர்களுடன் சுதந்திரமாகப் பேசுவதற்கும் எமது தொழிற்சங்க சம்மேளனம் உட்பட பொதுநல ஸ்தாபனங்களுக்கு காலதாமதமில்லாமல் அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட தொழிற்சங்க சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

சம்மேளனத்தின் தலைவர் திரு. ஜே. சி. பொன்னுஸ்டோ, பொதுச் செயலாளர் திரு. பொன். வேலுதாஸ் ஆகியோர் ஒப்பமிட்டுள்ள இவ் அறிக்கையின் சில விபரம் வருமாறு:—

"கடந்த ஒரு வார காலத்துக்கும் மேலாக சுதந்திரமற்ற நிலையில் அப் பிரதேசம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இம் மக்கள் சுயாதீன நடமாட்டமின்றி, பய பீதியுடன் அடங்கிக் கிடக்கின்றனர்.

மட்டக்களப்புக்கு அருகாமையில் உள்ள கொக்கட்டிச்சோலைக்குச் சென்று வர எமக்கு அனுமதி இல்லை. ஆனால், கொழும்பிலிருந்து அழைத்து வரப்பட்ட செய்திஸ்தாபனங்களின் பிரதிநிதிகளுக்கு அனுமதி. இந் நிலை நாம் ஒருமுறையல்ல பல முறை கைகளைக் கோர்த்து நின்றாலும் தமிழர்கள் இன்னும் இந் நாட்டில் அடிமைகளே என்பதனை எமக்கு உணர்த்துகின்றது.

இலங்கைக் குடியரசு தனது 39 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கையில் இன்று இருபதினாயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளார்கள். எமக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி இதுவரை பட்டினியால் பாம்புக்கடிக்கு ஆளாகி மாண்டுள்ளனர். நோயினால் இரண்டு பேர் இறந்துள்ளனர்"

# உமா மகேஸ்வரனைக் கொல்ல வட பழனியில் முயற்சி!

## நெருங்கிய சகா மரணம்

06.02.87.

சென்னை, பெப். 5.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் (புளொட்) தலைவர் உமா மகேஸ்வரனைக் கொலை செய்ய அக்கழகத்திலிருந்து பிரிந்து சென்ற ஈஸ்வரன் கோஷ்டியினர் முயன்றதாகவும் இம் மோதல்களில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

வடபழனியில் உள்ள 'புளொட்' அலுவலகத்தில் இச்சம்பவம் நேற்று இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இக்கோஷ்டியின் நடமாட்டத்தை அறிந்த உமா மகேஸ்வரனின் சகாக்கள் அவரை வேறு இடத்திற்கு அப்புறப்படுத்தியமையால் அவர் தப்பிக் கொண்டார் என்றும் தெரிய வருகிறது.

ஈஸ்வரன் கோஷ்டி மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் உமாவின் நெருங்கிய சகா ஒருவன் அமிர்தன் (வயது 21) கொல்லப்பட்டுள்ளான்.

# கைதிகள் உண்ணாவிரதம் பகிஷ்கரிப்பு

06.02.87.

(நமது நிருபர்)

சுதந்திர தினமான 4ஆம் திகதி புதன்கிழமை வெலிக்கடையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் உணவைப் பகிஷ்கரித்து முழு நாளும் உண்ணாவிரதம் இருந்தனர்.

'தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகம் எம்மை இலங்கையர் என்ற உணர்விலிருந்து எப்போதோ அந்நியப்படுத்தி விட்டது' என தமிழ் பேசும் அரசியல் கைதிகள் சார்பில் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**தமிழகத்தில் இருந்து அகதிகள் வெளியேற்றம்!**

ராமேசுவரத்திலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் தலைமன்னாருக்கு திரும்புவது வாரத்திற்கு சுமார் 500 முதல் 600 ஆக அதிகரித்துள்ளது. ஞாயிறன்று ராமேசுவரத்திலிருந்து 2 படகுகளின் மூலம் 80 அகதிகள் தலைமன்னார் பயணமாயினர். 25.01.87.

# குண்டுகள் வெடிப்புக்கு மத்தியில் மக்கள் பாதுகாப்புத்தேடி ஓட்டம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடுகள்

www.tamilarangam.net

## யாழ். மாநகரசபை

# மூன்று சில்லு தள்ளுவண்டிகளை பயன்படுத்த ஏற்பாடு!

யாழ்நகர்,

எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்தும் நோக்குடனும், எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் காலத்திலும் சுகாதார சேவையை மக்களுக்கு தடங்கல் இல்லாமல் மேற் கொள்ளும் வகையிலும் யாழ். மாநகரசபை டயரினால் செய்யப்பட்ட மூன்று சில்லு தள்ளு வண்டில்களைப் பயன் படுத்தவிருக்கிறது. பரீட்சார்த்தமாக தற்பொழுது சுமார் 75 ஆயிரம் ரூபா செலவில் பத்து வண்டிகளை மேற்படி சபை கொள்வனவு செய்யவிருக்கிறது.'

யாழ். மாவட்டத்திற்கான எரிபொருளை அரசாங்கம் தடை செய்ததினால் மக்கள் நெருக்கமாக வாழும் யாழ்.மாநகரசபை சுகாதார சேவைகள் முற்றுக ஸ்தம்பிதமடைந்துள்ளன. வீதிகள் எங்கும் குப்பை மேடுகளும் துர்நாற்றமும் வீசுவதால் கொடிய தொற்று நோய்கள் பரவும் நிலை தோன்றியுள்ளது.

எனவே எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதினாலும் வருங்காலத்தில் எரிபொருளை சிக்கனமாக பயன் படுத்தும் நோக்குடனும் டயரினால் உருவாக்கப்பட்ட மூன்று சில்லு வண்டிகளை சுகாதார சேவையில் ஈடுபடுத்தப் போவதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே சிவஞானம் தெரிவித்துள்ளார்.

# தெல்லிப்பளை ஆஸ்பத்திரி பாதிப்பு

கன்னுகம்,

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு நோயாளர்கள் கூட்டமிகுதியாக உள்ளே நேரத்தில் வந்து சேராத காரணத்தால் சகல பரிசோதனைக் கூடங்களும் செயலிழந்துள்ளன.

நிர்வாகமும் தடைப்பட்டுள்ளதால் நோயாளிகளும் விடுதிகளில் தங்கும் வைத்தியர்கள் தாதிகள் பணியாளர்களும் பலத்த சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

தீவுப்பகுதி கடலில்

## கடற்படை தீவிர ரோந்து; பாரிய கப்பலும் தரித்து நிற்கிறது

11.02.87.

தீவுப் பகுதி கடற் பிராந்தியத்தில் கடற்படையினர் கடந்த சில தினங்களாக தீவிர ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். மண்டைதீவு, பாலைதீவுக் கடற்பகுதியில் பாரிய கடற்படைக் கப்பலொன்று நீண்ட நாட்களாக தரித்து நிற்கிறது. கடந்த வார இறுதியில் புங்குடுதீவின் தென்கிழக்குக் கடற்பரப்பில் பீரங்கி படகு ஒன்று நங்கூரமிட்டுள்ளது.

# ஷெல் விழுந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு சேதம்

வவுனியா,

யாழ்ப்பாணக் கோட்டை இராணுவ முகாமில் இருந்து செவ்வாய்க்கிழமை இரவு நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் யாழ். ஆஸ்பத்திரிக்கு ஒரு இலட்சம் ரூபா அளவிலான சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கிடைக்கப்பெறும் தகவல்களின்படி ஆஸ்பத்திரிக்குள் விழுந்த மரங்களை கலவார்ட் உட்பட பல வார்ட்டுகளில் இருந்த நோயாளிகளை காப்பாற்றியதாக யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சர் டாக்டர் நச்சினார்க்கினியார் கூறியுள்ளார்.

அவசர சிகிச்சைகளுக்காக முக்கியமான மின்பிறப்பாக்கிகள் தேவைப்படுவதாக அறிவித்தும் இன்னமும் பெறமுடியவில்லை என்றும் கொழும்பில் இருந்து கட்டல்முறையில் அனுப்பி வைப்பதாக கூறியபோதிலும் இன்னமும் அதனைச் செயலாக்கவில்லை என்றும் டாக்டர் நச்சினார்க்கினியார் கூறியுள்ளார்.

யாழ். அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கமும் டாக்டர் நச்சினார்க்கினியாரும் சேதங்களை நேரில் சென்று பார்த்ததாகவும் தகவல்கள் கூறுகின்றன.

தொலைபேசி பரிவர்த்தனை நிலையம், பட்டறிகாரர் அறை, மகப்பேற்று பரிசோதனை அறை, சாப்பாட்டறை ஆகியவை பாதிக்கப்பட்ட பகுதிகள் எனவும் கூறப்பட்டது. கன்றுகுட்டிகள், பல்வேறு கள் சேதமடைந்திருப்பதுடன் அவ்வளவில் இருந்த ஒரு பெண் தாதி மயிரிழையில் அதனுடன் உயிர் தப்பியதாகவும் தகவல்கள் கூறின.

# யாழ்நகர கடைகள் இடம் பெயர்வு

யாழ் நகர்,

கோட்டை இராணுவ முகாமில் இருந்து அடிக்கடி "ஷெல்" ஏவப்படுவதனால் யாழ் நகரில் உள்ள பலசரக்கு, மரக்கறி, இறைச்சி விற்கும் கடைகளை வியாபாரிகள் தற்சமயம் வீடுகளுக்கும் வேறு இடங்களுக்கும் மாற்றி வருகின்றனர்.

பாதுகாப்புக்கருதி கோட்டை முகாமுக்கு அண்மையிலுள்ள காங்கேசன்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி ஆகியவற்றில் அமைந்திருந்த அநேக பல சரக்குக் கடைகள் ஏற்கனவே இரவோடிரவாக வேறு இடங்களுக்கும் மாற்றப்பட்டுள்ளன.

அண்மையில் கோட்டையில் இருந்து ஏவப்பட்ட "ஷெல்" யாழ். மரக்கறிச் சந்தையில் விழுந்து வெடித்த சம்பவத்தைத் தொடர்ந்து அங்குள்ள மரக்கறி, வாழைப் பழக்கடைகளும், வீடுகளுக்கும், வேறு இடங்களுக்கும் மாற்றப்பட்டிருந்தன.

இதனால் மரக்கறிச் சந்தைக்கு மக்கள் செல்வதும் குறைவாகவே இருக்கிறது.

தொலைபேசி :
01 472 2588.

## அம்பாறை மாவட்டத்தில்

# 'போராளிகள் தாக்கி 28 சிங்களர் சாவு, இலங்கை அரசு தகவல்

கொழும்பு, பிப். 8—

கிழக்கு இலங்கையில் அம்பாறை மாவட்டத்தில் அரந்தலவா என்ற கிராமத்தில் 28 சிங்களர்களை தமிழ்ப் போராளிகள் கொன்றுள்ளதாக இலங்கை அரசு அதிகாரி ஒருவர் ஞாயிறன்று கூறினார். இச்சம்பவம் சனிக்கிழமை இரவு நடந்தது. 12 ஆண்கள், 10 பெண்கள் மற்றும் 6 குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டதாக அவர் கூறினார்.'

ஒரு குழந்தையும் ஒரு ஆணும் மட்டுமே அந்த கிராமத்தில் உயிர் தப்பியவர்கள் என்றார்.

இது இம்மாவட்டத்தில் போராளிகள் சிங்களர்களின் கிராமங்களில் புகுந்து தாக்குவது இரண்டாவது முறையாகும். கடந்த புதனன்று மான் தோட்டம் மற்றும் பதினெட்டாம் காலனி ஆகிய இடங்களில் போராளிகள் தாக்கியதில் 9 பேர் இறந்தனர். 14 பேர் காயமடைந்தனர்.

கடந்த ஜனவரியில் மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச் சோலையில் இலங்கை ராணுவத்தினர் சுமார் 200 தமிழர்களைக் கொன்றதாகக் கூறப்பட்டது. இதற்குப் பதிலடியாகவே சிங்களவர்களை போராளிகள் தாக்குவதாகவும் கூறப்பட்டது.

## யாழ்ப்பாணத்தில் துக்கம் அனுஷ்டிப்பு!

04.02.87.

வவுனியா

இலங்கையின் 39வது சுதந்திர தினமான நேற்று யாழ்ப்பாணத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டதாக வவுனியாவுக்கு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கடைகள் மூடப்பட்டிருந்ததோடு வாகனப் போக்குவரத்தும் நடைபெறவில்லை என்றும் மக்கள் நடமாட்டம் இருக்கவில்லை என்றும் அச் செய்தி மேலும் தெரிவித்தது.

அன்னையர் முன்னணியினர் யாழ் நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியதாகவும் செய்திகள் தெரிவித்தன.

இது இவ்வாறிருக்க,

நேற்று மட்டு. நகரில் உள்ள அரச கட்டிடங்களில் தேசியக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

வழமையான கடமைகள்

இடம்பெற்ற போதும் நகரில் சன, வாகன நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டது.

Issued by the Press & Information Secretariat of the PEOPLE'S LIBERATION ORGANISATION OF TAMIL EELAM (PLOT) BM Box 7313, London WC1 3XX

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்